செ.வெ.எண்.293 நாள்.04.05.2018.

திருநெல்வேலி மாவட்டத்தில் அனைத்து வகை ( CBSE/CISCE/OGSCE மற்றும் இண்டர்நேஷனல் போர்டு பள்ளி) உள்கட்டமைப்புகளை ஆய்வு மேற்கொள்ளுவது தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

-------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அரசு உதவி பெறும் பள்ளிகள்/அனைத்து வகை சுயநிதி பள்ளிகள் (CBSE/CISCE/OGSCE மற்றும் இண்டர்நேஷனல் போர்டு பள்ளி) உள்கட்டமைப்புகளை சரி செய்திட குழுக்கள் அமைத்து ஆய்வு மேற்கொள்ளுவது தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று **(04.05.2018)** நடைபெற்றது.

கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

சென்னை உயர்நீதி மன்ற தீர்ப்பாணையின்படி, மாவட்ட அளவிலான குழுக்களை ஏற்படுத்தி அரசு உதவி பெறும் பள்ளிகள்/CBSE/CISCE/OGSCE மற்றும் அனைத்து வகை சுயநிதி பள்ளிகளில் உள்ள கட்டமைப்புகளை ஆய்வு மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கல்வித் துறை, பொதுப்பணித் துறை, நகரமைப்புத் துறை, சுகாதாரத் துறை, தீயணைப்புத் துறை, போக்குவரத் துறை, வருவாய்த் துறை, உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் மூலம் குழுக்கள் அமைக்கப்பட்டு பள்ளிக்கல்வித் துறையால் வழங்கப்பட்ட அங்கீகார சான்று (பள்ளிக்கல்வித் துறையால் வழங்கப்பட்ட அங்கீகார சான்று, ஆசிரியர்களின் கல்வித் தகுதிச் சான்றிதழ்கள், பள்ளிக் கட்டட உறுதிச்சான்று, பள்ளிக் கட்டட உரிமம் சான்று, பள்ளிக் கட்டட அனுமதி சான்று, தீயணைப்புத் துறையினரின் தடையின்மைச் சான்று, சுகாதாரத் துறையின் சான்று, பள்ளி வாகனங்கள்–தகுதிச் சான்று) உள்ளிட்டவைகளை ஆய்வு செய்திடவும், இதற்கென உள்ள மொபைல் செயலியல் புகைப்படம் உள்ளிட்டவைகளை பதிவேற்றம் செய்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்பணிகளை அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து விரைந்து முடிக்க வேண்டுமென பேசினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., திருநெல்வேலி கோட்டாட்சித் தலைவர் திருமதி.மைதிலி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.கணேஷ்குமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) திருமதி.பாலா, மெட்ரிக் பள்ளி ஆய்வாளர் திரு.நடராஜன், பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் திரு.பாஸ்கர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.மாஹின் அபுபக்கர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.